**வரையறுக்கப்பட்ட எக்ஸ்பிரஸ்வே ட்ரான்ஸ்போர்ட் (தனியார்) கம்பனி - 2015**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட எக்ஸ்பிரஸ்வே ட்ரான்ஸ்போர்ட் (தனியார்) கம்பனியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளபயடிான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முடிவடைந்த ஒன்பது மாத காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் வாசிக்கப்படவேண்டிய, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந்நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியாதுள்ளது. எனவே இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைய, ஒன்பது மாத காலப்பகுதிக்கான விரிவான வருமானக்கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளபடியான கம்பனியின் நிதி நிலைமையின் மீது நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை.

### 1.2 அபிப்பிராயத்தினை மறுப்பதற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பொறுப்பு

மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வது எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோளாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ் கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மெற்கொள்ளப்படும் பொருளதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்கு செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காயிவின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீட்டு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றை கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருன்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள்

போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாக காணப்டுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதினை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள், மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக செய்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்க பூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ‘‘சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும். பொதுப் பேரேடு, நாளேடுகள், நாளேட்டுக் குறிப்புகள், பொடுப்பனவு உறுதிச்சீட்டுகள் போன்ற பிரதான கணக்கீட்டுக் குறிப்புகளை பேணுவதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள் பின்வரும் தலைப்புகளின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

| | கணக்காய்வு பிரச்சினை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஒன்பது மாத காலப்பகுதிக்கான மொத்த வருமானம் ரூபா 78.5 மில்லியன் ஆகும். எவ்வாறான போதிலும், அவற்றுள் ரூபா 28.8 மில்லியன் தொகையானது ‘‘பயணிகள் பேரூந்துகளுக்கு ஆசனங்களை வழங்குதல்’’ (ETC பத்திரம்) எனும் மூல ஆவணத்தின் மூலமாக மாத்திரமே உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும், அந்த வருமானத்தின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்வுக்கான நுழைவிற்கான உப பிரதிகள் வழங்கப்படவில்லை. எஞ்சிய வருமானங்கள் வங்கி வைப்புகளின் ஊடாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அதனால், வருமானத்தின் சரியானதன்மை மற்றும் முழுமையான தன்மையை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.<br><br>மேலும், வங்கி வைப்புகளின் அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்ட வருமானம் எரிபொருளுக்கான செலவினங்கள், தரகு, உபகரண கட்டணங்கள் மற்றும் நிறுத்தல் கட்டணங்கள் கழித்து தேறிய அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டுள்ளதுடன், அந்த செலவினங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே, கணக்காய்வின் போது விற்பனைச் செலவினத்தின் சரியானதன்மை மற்றும் முழுமையான தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | கணக்காய்வாளரின் கருத்துரையுடன் இணங்குகின்றேன். | வருமானமானது மொத்த அடிப்படையில் இனங்காணப்பட வேண்டியதுடன், அதனோடு தொடர்புடைய மூல ஆவணங்களை பயன்படுத்தி உறுதிப்படுத்த வேண்டும். |
| (ஆ) | பேரூந்துகளுக்காக எரிபொருள் கட்டணங்கள் அதிவேக வீதிகளின் நுழைவாயில் கட்டணங்களை விஞ்ச வேண்டிய போதிலும், மீளாய்வு காலப்பகுதிக்காக மொத்த நுழைவாயில் கட்டணங்கள் ரூபா 7.92 மில்லியனாக காணப்பட்ட போதிலும், எரிபொருள் கட்டணங்கள் ரூபா 4.84 மில்லியன் ஆகும். அதனால், செலவினங்களின் அடிப்படையில் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடும் சரியானதன்மை தொடர்பில் ஏற்றுக்கொள்ள முடியாது.<br><br>அதேவேளை, இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இற்கு முரணாக, மீளாய்வாண்டுக்கான வருமானம் இரு அடிப்படையில் இனங்காணப்பட்டிருந்தது. | கணக்காய்வாளரின் கருத்துரையுடன் இணங்குகின்றேன். | கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்கான உள்ளகக் கட்டுப்பாடு பலப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 9 மாத காலப்பகுதியினுள் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களின் போக்கினை காண்பிக்க இயலுமான வகையில் கம்பனி நாளதுவரையாக்கப்பட்ட பேரேட்டினை பேணியிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வாளரின் கருத்துரையுடன் இணங்குகின்றேன். | கொடுக்கல் வாங்கல்களை நாளதுவரையாக பதிவு செய்யும் வகையில் பேரேடுகள் பேணப்பட வேண்டும். |

**1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்**

| | கணக்காய்வு பிரச்சினை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 36 ஆம் பந்தியின் பிரகாரம், ஏதேனுமொரு நிறுவனம் தமது நிதிக்கூற்றினை தயாரிக்கும் போது தமது அறிக்கையிடும் திகதியை மாற்றும் போது அந்த நிறுவனம் ஒரு வருடத்திற்கு குறைவான அல்லது அதிக காலத்திற்கு பயன்படுத்துவதற்கு பயன்படுத்துவதற்கான காரணங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டியதுடன், தொகைகள் முழுமையாக ஒப்பிட முடியாது என்பதும் வெளிப்படுத்தப்பட வேண்டும். கம்பனி அதன் அறிக்கையிடும் திகதியை மாற்றியிருந்த போதிலும், குறித்த விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளரின் கருத்துரையுடன் இணங்குகின்றேன். | இலங்கை கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 16 இன் 26 ஆம் பந்தியின் பிரகாரம், நிதிக் குத்தகை பொறுப்பு மற்றும் குத்தகை வழங்கியமையால் ஏற்பட்ட சொத்துக்கள் குத்தகை கொடுப்பனவுகளின் இற்றைப் பெறுமதியாக இனங்காணப்பட வேண்டும். எவ்வாறான போதிலும், கம்பனி அதன் ஆகக் குறைந்த குத்தகை பொறுப்பு மற்றும் சொத்துக்களை ஏற்றுக்கொள்ளப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க இனங்காணப்படவில்லை. | கணக்காய்வாளரின் கருத்துரையுடன் இணங்குகின்றேன். | இலங்கை கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (இ) | நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 3.12(12) இன் பிரகாரம், அறிக்கையிடும் திகதியில் உள்ளபடியான திட்டவட்டமான பிரதிபலன்களின் அடிப்படையில் பொறுப்புகள் இனங்காணப்பட வேண்டிய போதிலும், கம்பனி நியமத்திற்கு இணங்க செயற்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. | கணக்காய்வாளரின் கருத்துரையுடன் இணங்குகின்றேன். | இலங்கை கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு பிரச்சினை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் சம்பள செலவினங்கள் ரூபா 2.29 மில்லியனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், அவை குறித்த காலப்பகுதிக்கு உரித்தற்றதாக காணப்பட்டதுடன், தவறாக வகைப்படுத்தப்பட்டிருந்தன. | கணக்காய்வாளரின் கருத்துரையுடன் இணங்குகின்றேன். | கொடுக்கல் வாங்கல்கள் உரிய காலப்பகுதியில் பதிவு செய்யப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றுகள் காணப்படாமை

| | விடயம் | தொகை (மில்லியன்) | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (i) | செலவினங்கள் | 19.89 | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் | கணக்காய்வாளரின் கருத்துரையுடன் இணங்குகின்றேன். | கொடுக்கல் வாங்கல்களை உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்வாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ii) | சம்பளங்கள், முற்கொடுப்பனவுகள் மற்றும் கடன் கொடுத்தல்களின் மீதான செலவினம் | 1.99 | சம்பளப் பட்டியல்கள் மற்றும் பதிவேடுகள் | -மேற்படி- | -மேற்படி- |
| (iii) | டயர், ரியூப், பழுதுபார்த்தல் கட்டணங்கள் மற்றும் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தும் மற்றும் எரிபொருள் மற்றும் காப்புறுதிச் செலவினம் | 11.05 | வழங்குநரின் பற்றுச்சீட்டுகள் மற்றும் காப்புறுதிச் சான்றிதழ்கள் | -மேற்படி- | -மேற்படி- |
| (iv) | திறைசேரி நடைமுறை கணக்கு – மத்திய வங்கி | 10.86 | உடன்படிக்கைகள், சபையின் தீர்மானங்கள் அல்லது மீதியுடன் தொடர்படைய வேறு ஏதேனும் ஆவணங்கள் | -மேற்படி- | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டுக்கான நிதிப் பெறுபேறுகள் ரூபா 15.13 மில்லியனான நட்டமாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த கடந்த வருடத்தின் இலாபமானது ரூபா 21.64 மில்லியன் (ரூபா 28.85*3/4) ஆக காணப்பட்டது. அதற்கமையவாக நிதிப் பெறுபேறுகளில் ரூபா 36.77 மில்லியனான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மேற்குறித்த நிதி விளைவுகளிலான வீழ்ச்சிக்கு, விகிதாசார அடிப்படையில் தயாரிக்கப்பட்டு முன்னைய காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது, வருமானங்களில் ஏற்பட்ட ரூபா 3.70 மில்லியனான வீழ்ச்சி மற்றும் விற்பனை கிரயத்திலான ரூபா 26.37 மில்லியனான அதிகரிப்பு ஆகியன பிரதானமான காரணங்களாக அமைந்திருந்தன.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்கள் தொடர்பான பகுப்பாய்வு

| விடயம் | 2015 இன் ஒன்பது மாதங்களுக்கான | 2014/15 ஒன்பது மாதங்களுக்கு திருத்தப்பட்ட | வீதங்களிலான மாற்றங்ளக் | முன்னைய வருடத்துடனான போக்கு |
|---|---|---|---|---|
| வருமானம் | 78,760,637 | 82,459,704 | (4) | குறைவு |
| விற்பனைக் கிரயம் | 70,455,661 | 44,082,356 | 60 | அதிகரிப்பு |
| நிர்வாகச் செலவினம் | 6,454,940 | 942,423 | 585 | அதிகரிப்பு |
| பேரூந்துகளுக்காக எரிபொருள் | 4,843,111 | 36,656 | 13,112 | அதிகரிப்பு |
| பேரூந்து பழுதுபார்த்தல் கட்டணங்கள் | 8,108,982 | 4,809,891 | 69 | அதிகரிப்பு |
| செயற்பாட்டு சம்பளங்கள் | 9,115,029 | 4,806,158 | 90 | அதிகரிப்பு |
| கடவைக் கட்டணங்கள் | 7,916,200 | 4,450 | 237,090 | அதிகரிப்பு |

ஒவ்வொரு காலப்பகுதிக்கும் உரிய அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் தொடர்ச்சியாகவும் முழுமையாகவும் பதிவு செய்யாத நிலைமையின் அடிப்படையில், மேற்படி விடயங்கள் தொடர்பில் போக்கு தொடர்பான பகுப்பாய்வினை மேற்கொள்ளல் விளைவற்றது என்பது அவதானிக்கப்பட்டது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

| | 2015 | 2014/15 |
|---|---|---|
| நடைமுறைச் சொத்து விகிதம் | 0.36 | 0.70 |
| மொத்த இலாப விகிதம் - சதவீதம் | 10.54 | 46.54 |
| தேறிய இலாப வீதம் - சதவீதம் | (19.2) | 21.9 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

I. நடைமுறை சொத்து விகிதத்திற்கு ஒப்பாக கம்பனியின் நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதிக்குஒப்பாக பாரிய அளவிலான பொறுப்புகள் காணப்படுகின்றமையால், அதன் குறுங்கால் கடனைச் செலுத்துவதற்கு போதுமான செயற்படு மூலதனமொன்று காணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

II. மொத்த இலாப வீதம் 36 சதவீதத்தினாலும், தேறிய இலாப வீதம் 41 சதவீதத்தினாலும் குறைவடைந்துள்ளது. வருமானம் குறைவடைந்தமை மற்றும் விற்பனைக் கிரயம் அதிகரித்தமை

மொத்த இலாபம் இவ்வாறு வீழ்ச்சியடைவதற்கு பிரதான காரணமாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.
எவ்வாறான போதிலும், அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் பதிவு செய்யப்படாத காரணத்தால், சரியான முறையில் கணிப்பீடு செய்ய முடியாதிருந்தது. அந்த மதிப்பீடுகளின் சரியானதன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு பிரச்சினை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதில் ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட கால தாமதமொன்று ஏற்பட்டது. | கருத்துரை கிடைக்கவில்லை. | நிதிக்கூற்றுக்கள் உரிய காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**4.2 கூட்டிணைந்த திட்டம்**

| கணக்காய்வு பிரச்சினை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியால் மீளாய்வாண்டுக்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் குறித்த திட்டத்தினை தயாரிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு பிரச்சினை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளகக் கட்டுப்பாட்டினை வலுப்படுத்துவதற்கு மற்றும் செயல்நடைமுறைகளை மேற்பார்வை செய்வதற்கு உள்ளகக் கணக்காய்வு அலகொன்று கம்பனியில் தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் கிடைக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு அலகொன்று தாபிக்கப்பட வேண்டும். |

**4.4 கணக்காய்வுக் குழு**

| கணக்காய்வு பிரச்சினை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இந்த அறிக்கையின் திகதி வரையிலும் கணக்காய்வுக் குழுவொன்று தாபிக்கப்படவில்லை. | கருத்துரைகள் கிடைக்கவில்லை. | கணக்காய்வுக் குழுவொன்று தாபிக்கப்பட வேண்டும். |

**4.5 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு பிரச்சினை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டுக்கான வருடாந்தப் பாதீடு கம்பனியால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் கிடைக்கவில்லை. | வருடாந்தப் பாதீடு கம்பனியால் தயாரிக்கப்பட வேண்டும். |